# ஊரையே கூட்டிய ப்ரணய கலகம்

அன்பர்களே!

இன்று எங்கு பார்த்தாலும் கலகம்,வாய்ச்சாடல்கள்,சண்டை என உலகமே அமைதியிழந்து தவிக்கிறது.சரி,பூலோக வைகுண்டமான திருவரங்கத்திலேயே திவ்யத்தம்பதிகளான தாயார் ரங்கநாச்சியாரும் நம்பெருமாளும் பங்குனி உத்திர நாளில் ஊரே பார்க்கும் படி கலகம் செய்து கொள்கிறார்கள்.அற்புதமான இனிய கல்யாண நாளில் திவ்யத்தம்பதியினர் சண்டை போடும் அவலம் ஏன் உண்டானது?

தமிழ் இலக்கியத்தில் ஐவகை நிலப் பகுதிகளில் வாழும் மக்களின் ஒழுக்கத்தினை வகையறுத்த தொல்காப்பியர்,மருதத்திணை[வயலும் அதைச் சுற்றிய பகுதிகளும்]மக்களின் ஒழுக்கமாக தலைவன் வேறு பல பெண்களுடனும்,பரத்தைகளுடனும் பழகுவதை எடுத்துக்கூறுகிறார்.ஏன் என்றால் மருத நிலத்தில் வளமும்,செல்வச்செழிப்பும் அதிகம்.மக்கள் பலவழிகளில் தங்கள் நேரத்தினைக் கலைகளிலும்,கேளிக்கைகளிலும் செலவழிக்கும் போது தனிமனித ஒழுக்கமும் சற்று மீறப்படும் வாய்ப்பு அதிகம் எனலாம்.இதனால் மனம் கலங்கிய தலைவி ,தலைவனை ஏற்க மறுப்பதையும்,சண்டைகள் பல போடுவதையும்,தலைவன் பாணர்களைத் தூது விட்டு அமைதிப்படுத்துவதையும்,பின் இருவரும் சேர்வதையும் இலக்கிய நயத்துடன் பல பாடல்களில் சங்கப்புலவர்கள் கூறியுள்ளனர்.

பல பெண்களைத் திருமணம் செய்யும் வழக்கம் அக்காலகட்டத்தில் இருப்பினும்,"ஒருவனுக்கு ஒருத்தி" என்ற வாழ்க்கைக் கோட்பாடு பலவழிகளில் ஆங்காங்கே புலவர்களால் வலியுறுத்தப் படுவதைக் காணலாம்.கணவன் எவ்வளவு தவறுகள் செய்தாலும்,ஒழுக்க நெறியில் மாறினாலும்,மனைவியானவள் அவனைத் தாய்மையுடன் ஏற்று,அரவணைத்து,மன்னித்து நல்வழிப்படுத்திட வேண்டும் என்பது கற்பு இலக்கணம் ஆகும்.ஆனால் இதைக் கால நவநாகரிகப் பெண்கள் எவ்வளவு தூரம் ஏற்பர் என்பது பெரும் கேள்விக்குறியே!!!

**மருதநில இலக்கணமும் திருவரங்கமும்:**

மேற்கூறிய இலக்கணத்தைத் திருவரங்கக் கோயிலில்வழிபாட்டில்,திருவிழாவில் ஆச்சாரியர்கள் புகுத்தியுள்ளனர்.என்னடா,ராமனின் குலதெய்வக் கோயிலில் மனித ஒழுக்க நெறி மாற்றப்பட்டு உள்ளதே என்ற கேள்வி கண்டிப்பாக வரவேண்டும்!!!அங்கே தான் வாழ்க்கையின் எதார்த்தமும் ஆன்மீகமும் ,காவிரி திருவரங்கத்தில் சற்று பிரிவது போல விலகி கவனமாக இணைகின்றன.இலக்கியத்தையும்,எதார்த்த வாழ்க்கையையும் விட்டுவிட்டு சற்று ஆன்மீகத்தில் மூழ்குவோம் வாருங்கள்.

திருவரங்க அழகிய மணவாளப் பெருமாள் ரங்கநாயகித் தாயாருடன் இல்லறம் செய்யுங்கால்,உறையூர் சோழ மன்னனின் மகளான கமலவல்லி என்ற பெண்ணுடன் உறவு ஏற்படுத்திக் கொள்கிறார்.இதை அறிந்த தாயாரால் பெருமாளின் செயலை ஏற்க முடியவில்லை.பங்குனி உத்திர நாளில் தன்னைக் காணவரும் பெருமாளை,வீட்டுக்குள் அனுமதிக்க மறுக்கிறார்.ஊரே கூடுகிறது.தாயார் பெருமாளை ஊரார் முன் வைத்துத் தேங்காய் மட்டைகளாலும்,தயிராலும்,அடித்து தன் மனவுலைச்சலை வெளிப்படுத்துகிறார்.

கல்யாண நாளில் தன்னைக் காண வந்த கணவனுடன் நேரடியாகப் பேசக்கூட விரும்பாது,தன் தோழிகள் மூலமே பேசுகிறார்.இந்த விஷயம் தாயாரின் அப்பாவான ஸ்வாமி நம்மாழ்வாருக்குத் தெரிய வருகிறது.ஆழ்வார் ஓடோடி வருகிறார்.கணவன் --மனைவிக்கு இடையே ஏற்பட்ட கலகத்தினைத் தீர்க்க இருவரிடமும் தூது போகிறார்.இருதரப்பிலும் பல வாதப்ரதிவாதங்கள் காட்டப் படுகின்றன.தாயார் எவ்வளவு கூறியும் பெருமாளை ஏற்க மறுக்கிறார்.பெருமாள் இறுதியில் தான் செய்த செயலுக்கு மன்னிப்பு வேண்டுகிறார்.தாயார் மீது உள்ள தூய அன்பையும்,காதலையும்,அவளின்றித் தன்னால் செயல் பட இயலாத தத்வத்தையும் கூறி சமாதானம் செய்ய முற்பட்டும் தாயார் கேட்பதாயில்லை.கடைசியில் ஆழ்வார் தாயாருக்கு ஞானோபதேசம் செய்து அவளைப் பெருமாளை ஏற்க வைத்து இல்லற

தர்மம் அழியாமல் காக்கிறார்.பின்னர் இருவரும் கலகம் தீர்ந்து ஆதர்ஷணத்தம்பதிகளாய் உலகைப் பரிபாலணம் செய்ய பங்குனி உத்திர மண்டபத்தில் ஏகாந்தமாய் சேர்ந்து காட்சிதருகிறார்கள்.அடியார்கள் உலகின் தாய்தந்தையைக் கண்டு சரணாகதி செய்து பலன் பெறுகிறார்கள்.இதுவே பங்குனி உத்திரத்தில் நிகழும் காண்பதற்கு அரிய காட்சியாகும்.

*வருடத்திற்கு ஒரே ஒருமுறை தான் திருவரங்கத்தில் தாயாரும் பெருமாளும் சேர்ந்து காட்சி தருவர்.அதுவும் பகல் சுமார் இரண்டு மணி முதல் மறுநாள் அதிகாலை நான்கு மணி வரைதான் இந்த திவ்யதரிசனம் கிடைக்கும்.மறுநாள் அதிகாலை,பெருமாள் அடுத்த ஆண்டுக்குத் தேவையான அணைத்தையும் தாயருக்கு அளித்துவிட்டு உலகரட்சகத்திற்காக ‘‘கோரதம்‘‘ என்ற தேரில் ஏறி மாடவீதிகளில் உலா வந்து மூலஸ்தானம் சேர்கிறார்.பங்குனி மாத பத்துநாட்கள் ப்ரம்மோற்சவம் ,‘‘ஆதி ப்ரம்மோற்சவம்‘‘ என்ற சிறப்பு உடையது.காரணம் திருவரங்கதிவ்யத் தம்பதிகளுக்கு ப்ரமதேவன் சத்யலோகத்தில் கொண்டாடிய உற்சவம் இவ்விழா என்று நம்பப்படுகிறது.இவ்விழாவை ‘‘மட்டையடி உற்சவம்‘‘ என்று மக்கள் அழைப்பர்.

இனி இதன் அடிப்படையில் ஒரு பக்தன் எப்படி ஆன்மீக நெறியில் ,குருவின் துணையுடன் பயணித்து இறைவனை அடைவது என்ற தத்வத்தினைப் பார்ப்போமா?